ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2047/4 - 2017 නොවැම්බර් මස 27 වැනි සඳුදා - 2017.11.27

2047/4 ஆம் இலக்கம் - 2017 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 27 ஆந் திகதி திங்கட்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி III - காணிகள்

### காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (460 ஆம் அத்தியாயம்)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

ஒரு பகிரங்கத் தேவைக்காக கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசு எண்ணியிருக்கின்றது என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தம்) சட்டத்தினால் திருத்தப்பட்ட வாறான காணி எடுத்தற் சட்டம் (460 ஆம் அத்தியாயம்) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம்**

காலி மாவட்டத்தில் நெலுவை பிரதேச செயலாளர் பிரிவில் இல. 233 பட்டுவங்கல கிராம அலுவலர் பிரிவில் பட்டுவங்கல கிராமத்தில் அமைந்துள்ள சு.வ.ப. இல. 472 உடைய இறுதி வரைபடத்தில் மேலதிக இல. 21) விஸ்தீரணத்தில் சுமார் 2.8330ஹெக்டயார் விஸ்தீரணமுடைய கீழே குறிப்பிடும் காணி:

**1. காணித் துண்டு இல.: 770**

காணியின் பெயர்: குறுந்துவத்தை; விபரம்: வீட்டுத் தோட்டம் மற்றும் அடர்ந்தகாடு; விஸ்தீரணம்: 2.8330ஹெக்டயார்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகார மளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2017 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 11 ஆந் திகதி மு.ப. 10.00 மணிக்கு நெலுவை பிரதேச செயலகத்தில் என்முன்பாக வெளிப்படுத்தும் படியும் மற்றும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணிக்கான நஷடஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும் நஷ்டஈட்டுத் தொகையையும் அத்தொகை கணிக்கப்பட்ட முறையினையும் எழுத்து மூலமாக இரு பிரதிகளாக 2017 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 01 ஆந் திகதிக்கு முன்னர் என்னிடம் அறிவிக்கும்படி இத்தால் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

சீ. பி.கே. ஜானக குருசிங்ஹ,
பிரதேச செயலாளர்,
நெலுவை.

பிரதேச செயலகம்,
நெலுவை,
2017,செத்தெம்பர் 27.

12– 319



*இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*